2012 மார்ச் 28]

நிலையில் மேம்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

4—

கல்விக் கட்டணம்

***3108—திரு. வி.சி. சந்திரகுமார்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்பத்தில் முதல் பட்டதாரி மாணவருக்கான கல்விக் கட்டணச் சலுகையை அரசே நேரடியாகச் செலுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) முதல் பட்டதாரி மாணவர்களுக்கான கல்விக் கட்டணச் சலுகையை அரசே நேரடியாகச் செலுத்தும்பொருட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 2010–2011 ஆம் கல்வியாண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

திரு. வி.சி. சந்திரகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் பட்டதாரி மாணவர்களுக்கான கட்டணச் சலுகை என்பதை அரசு நிர்ணயம் செய்திருக்கின்ற கட்டணத் தொகையிலே ஒரு குறிப்பிட்ட பகுதியை இப்போது கொடுக்கின்றோம்.

முழுமையாக அந்த மாணவர்களுக்கான கட்டணத்தைச் செலுத்துவதற்கான அறிவிப்பு ஏதேனும் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது, முதல் பட்டதாரி மாணவர்களுக்கான கல்விக் கட்டணச் சலுகையாகும். அரசு மற்றும் தனியார் பொறியியல் கல்லூரிகளிலும், மருத்துவக் கல்லூரிகளிலும், பல் மருத்துவக் கல்லூரிகளிலும், வேளாண்மைக் கல்லூரிகளிலும், கால்நடை மருத்துவக் கல்லூரிகளிலும், சட்டக் கல்லூரிகளிலும் ஒற்றைச் சாளர முறை, அதாவது சிங்கிள் விண்டோ சிஸ்டம் மூலமாகச் சேர்க்கப்பெறும் மாணவர்கள் குடும்பத்தில் இதுவரை யாரும் பட்டதாரிகளே இல்லை என்று சொன்னால், அந்த மாணவர்கள், தொழில் கல்வி படிப்பதை ஊக்குவிப்பதற்காக சாதிப் பாகுபாடின்றியும், வருமானத்தைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமலும், அவர்கள் செலுத்த வேண்டிய கல்விக் கட்டணம் முழுவதையும் சில நிபந்தனைகளுக்குட்பட்டு அரசே ஏற்றுக்கொள்ளும் என ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கல்விக் கட்டணத்தோடு மட்டுமல்லாமல், முழுக் கட்டணத்தையும் கட்ட வேண்டும் என்கிறார். இந்த முதல் பட்டதாரிகளுக்குக் கற்பிக்கும் கட்டணம், அதாவது டியூஷன் ஃபீஸ் மட்டுமே அளிக்கப்படும் என்று அந்த ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசுப் பொறியியல் கல்லூரிக்கு என்று தனியாகக் கல்விக் கட்டணம் இருக்கிறது. அரசு உதவி பெறும் கல்லூரிக்கு என்று தனியாகக் கல்விக் கட்டணம் இருக்கிறது. சுய நிதிப் பொறியியல் கல்லூரிக்கு எனத் தனியாகக் கல்விக் கட்டணம் இருக்கிறது. ஆகவே, அரசுக் கல்லூரிகளுக்கு 2,000 ரூபாய் கல்விக் கட்டணத்தையும், அரசு உதவிபெறும் பாடப் பிரிவுகளுக்காக வழங்கப்படுகிற 4,000 ரூபாய் கல்விக் கட்டணத்தையும், சுய நிதி பொறியியல் கல்லூரி பாடப் பிரிவுகளுக்கான 20,000 ரூபாய் கல்விக் கட்டணத்தையும் அரசு செலுத்தி வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

2012 மார்ச் 28]

திரு. வி.சி. சந்திரகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டணம் செலுத்தப்படுகின்றபோது தனியார் கல்லூரிகளிலே அதற்கு மேலாக வசூலிக்கப்படுவதால், பல பேர், உண்மையாகவே ஏழைகளாக இருப்பவர்கள் எல்லாம், அந்த 20,000 ரூபாய் கொடுக்கப்படுவதை எடுத்துச் சென்று கொடுக்கிறபோது, அதுபோல் பல மடங்கு கட்ட வேண்டிய நிலை ஏற்படுவதாலேதான் நேரடியாக முழுக் கட்டணத்தையும் அரசே செலுத்துவதற்கு வாய்ப்பு இருந்தால், அந்த ஏழை மாணவர்கள் தொடர்ந்து படிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதுதான் என்னுடைய கருத்தாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது, முதல் பட்டதாரி மாணவர்கள் கல்விக் கட்டணத்திற்கான சலுகை குறித்ததாகும். தனியார் கல்லூரிகளில் படிக்கின்றபோது அந்த மாணவர்களின் கல்விக் கட்டணத்தை எந்தவிதமான பாகுபாடின்றியும் அரசாங்கத்தால் ஒவ்வோர் ஆண்டும் அதற்காக நிதி ஒதுக்கப்பட்டு, அங்கே கல்விக் கட்டணம் அனுப்பி வைக்கப்படுகிறது. இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மாவினுடைய அரசு, 2012–2013 ஆம் ஆண்டு, 477 கோடியே 97 இலட்சத்து, 12 ஆயிரம் ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தனியார் கல்லூரிகளில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல குறைபாடு இருந்தால், அதற்கெனக் கட்டண நிர்ணயக் குழு, அதாவது மானிட்டரிங் கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது. அந்த கமிட்டியின்மூலமாக அது பார்வையிடப்பட்டு, முறையான விதத்திலே, மாணவர்கள் பாதிக்காத வகையிலே மாண்புமிகு முதலமைச்சர் அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, சுருக்கமாகக் கேள்வி கேளுங்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வி படிக்கக்கூடிய மாணவர்களுக்கு வங்கிகளில் வழங்கக்கூடிய கல்விக் கடன் என்பது பல வங்கிகளில் பரவலாகத்

திட்டமிட்டு மறுக்கப்படுகிறது. ஒருபுறத்திலே ஜாமீன் என்று சொல்லக்கூடிய செக்யூரிட்டி கேட்கப்படுகிறது. எஸ்.சி./எஸ்.டி. மாணவர்களும்கூட எம்.எட்., பி.எட்., டீச்சர் டிரெயினிங் படிக்கக்கூடிய நேரத்தில் கல்விக் கடன் பெற முடியாமல் பாதியிலே படிப்பை நிறுத்தக்கூடிய அவல நிலை நீடிக்கிறது. வங்கிகளைக் கேட்டால், வங்கி அதிகாரிகள் எங்களை யாருமே கட்டுப்படுத்த முடியாது என்கிறார்கள். அரசு ஒரு கட்டணத்தை நிர்ணயித்துள்ளது; வங்கிகள் ஒரு கட்டணத்தை நிர்ணயித்திருக்கிறது. உதாரணமாக, பி.எட். படிப்பதற்கு 60,000 ரூபாய் என்று சொன்னால், 14,000 ரூபாய் மட்டுமே வங்கிகளிலே கல்விக் கடன் வழங்குவதாக இருக்கிறது. ஆக, இத்தகைய நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி, ஏழையெளிய மாணவர்கள் உயர் கல்வி பெறுவதற்கான கல்விக் கடனை வங்கிகளிடமிருந்து பெறுவதற்கு ஒரு உரிய வழிகாட்டுதலைக் கொண்டு வர, நமது அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரியில் படிக்கின்ற மாணவர்களைப் பொறுத்தவரையில், கல்விக் கட்டணம் செலுத்துவதில் எந்தவிதமான குறைபாடும் ஏற்படவில்லை. இந்த வேளையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எவருடைய பெயரையும் சொல்லாமல் ஒரு கருத்தைச் சொல்கிறார். இதுவரையில் எந்தவிதமான ஒரு குறைபாடும் மாணவர்களிடத்திலேயிருந்து அரசுக்கு வரவில்லை. இதனால் யாரேனும் தனி நபர் பாதிக்கப்பட்டதாக நீங்கள் குறிப்பிட்டால், இதுபற்றி அரசு நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழ. கருப்பையா, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.